**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

**அசல் வழக்கு எண். 88/2013**

நாள் 14.9.2022

பெயர். சையத் ஜலால் த/பெ. சையத் ஷெரீப்

வா.சா1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

9. என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கறிஞர் ஆணையருக்கு இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட வாரண்டில் 17.8.1962 மற்றும் 7.12.1960 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் சொத்துக்களை அளக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி இரண்டு ஆவணங்களின் அடிப்பலைடையில் அளந்தேனா என்றால் நான் ஆவணத்தை பார்க்கவில்லை வழக்கறிஞர் ஆணையர் கூறியதின் அடிப்படையில் சொத்துக்களை அளந்தேன்.

10. வழக்கறிஞர் ஆணையர் சொத்துக்களை அளந்த போது மேற்படி இரண்டு ஆவணங்களின் நகல்களையும் அவர் வைத்து கொண்டு அதனை பார்த்து என்னை சொத்துக்களை அளக்க சொன்னாரா என்றால் ஆமாம். மேற்படி இரண்டு ஆவணங்களில் சொல்லி உள்ள ஜக்பந்திபடி நான் சொத்துக்களை அளந்து காண்பித்தேனா என்றால் காண்பித்தேன்.

11. நீ.ம.சா.ஆ.2 வழக்கறிஞர் ஆணையரின் வரைபடமானது நான் கொடுத்த சர்வே புலவரைபடத்தின்படி வரைந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7.12.1960 தேதியிட்ட ஆவணத்தில் சொல்லி உள்ள ஜக்பந்தி மற்றும் அளவுகளின் படி நான் சொத்தை அளந்து காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். மேற்படி அளவுகள் புலத்தில் அல்லது பூமியில் இருந்தது என்றால் சரிதான்.

12. 7.12.1960 தேதியிட்ட ஆவணத்தில் சொல்லி உள்ள சொத்தானது சர்வே எண்.135/1 மற்றும் சர்வே எண் 140 ஆகிய சர்வே எண்களில் கலந்து வருகிறது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 7.12.1960 தேதியிட்ட ஆவணத்தில் சொல்லி உள்ள சொத்து விவரத்தின் படி நான்கு பக்கமும் சுற்றுசுவர் இருந்தது என்றால் சரிதான். மேற்படி சுற்றுசுவர் தெற்கு பக்கம் கிழக்கு மேற்கு 12 அடி இடிக்கப்பட்டதாக வழக்கறிஞர் ஆணையர் குறிப்பிட்டிருப்பது சரியா என்றால் சரிதான்.

13. நான் 9 1/2 வருடங்களாக நில அளவையர் அலுவலகத்தில் பணிபுரிந்த அனுபவம் உள்ளது. எனக்கு சதுர அடி மற்றும் சதுர மீட்டர் ஆகியவற்றின்படி சொத்தின் பரப்பளவை கணக்கிட தெரியுமா என்றால் தெரியும். 17.8.1962 தேதியிட்ட ஆவணத்தின சொத்தின் ஜக்பந்தி மற்றும் அளவுகளின்படி வழக்கறிஞர் ஆணையர் என்னை அளக்க சொன்னார் நான் அளந்து காண்பித்தேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1ஆவது அளவு கிழக்கு மேற்கு தாய் சுவர் உட்பட கஜம் 6, வடக்கு தெற்கு கஜம் 19 என கண்டுள்ளது என்றால் சரிதான். 1 கஜம் 3 அடி என்றால் சரிதான். அந்நிலையில் மேற்படி கிழக்கு மேற்கு 18 அடி வடக்கு தெற்கு 57 அடி வருகிறது என்றால் சரிதான். மேற்படி அளவுகளின் மொத்த விஸ்தீரணம் 1026 சதுரடி என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2ஆவது அளவு கிழக்கு மேற்கு 8 கஜம் வடக்கு தெற்கு கஜம் 13 என கண்டுள்ளது என்றால் சரிதான். அந்நிலையில் கிழக்கு மேற்கு 24 அடி வடக்கு தெற்கு 39 அடி என்றால் சரிதான். மேற்படி அளவுகளின் மொத்த விஸ்தீரணம் 936 சதுரடி என்றால் சரிதான்.

15. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 3ஆவது அளவு கிழக்கு மேற்கு 9 கஜம் வடக்கு தெற்கு கஜம் 30 என கண்டுள்ளது என்றால் சரிதான். அந்நிலையில் கிழக்கு மேற்கு 27 அடி வடக்கு தெற்கு 90 அடி என்றால் சரிதான். மேற்படி அளவுகளின் மொத்த விஸ்தீரணம் 2430 சதுரடி என்றால் சரிதான்.

16. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 4ஆவது அளவு கிழக்கு மேற்கு 4 கஜம் 1ம்அடி வடக்கு தெற்கு கஜம் 10 என கண்டுள்ளது என்றால் சரிதான். அந்நிலையில் கிழக்கு மேற்கு 13 அடி வடக்கு தெற்கு 30 அடி என்றால் சரிதான். மேற்படி அளவுகளின் மொத்த விஸ்தீரணம் 390 சதுரடி என்றால் சரிதான்.

17. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 5ஆவது அளவு கிழக்கு மேற்கு 4 கஜம் அடி 1 வடக்கு தெற்கு கஜம் 14 என கண்டுள்ளது என்றால் சரிதான். அந்நிலையில் கிழக்கு மேற்கு 13 அடி வடக்கு தெற்கு 42 அடி என்றால் சரிதான். மேற்படி அளவுகளின் மொத்த விஸ்தீரணம் 546 சதுரடி என்றால் சரிதான்.

18. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 6ஆவது அளவு கிழக்கு மேற்கு 15கஜம் வடக்கு தெற்கு கஜம் 17 என கண்டுள்ளது என்றால் சரிதான். அந்நிலையில் கிழக்கு மேற்கு 45 அடி வடக்கு தெற்கு 51அடி என்றால் சரிதான். மேற்படி அளவுகளின் மொத்த விஸ்தீரணம் 2295 சதுரடி என்றால் சரிதான்.

19. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்சொன்ன 1 முதல் 6 அளவுகளின் மொத்த கூட்டு தொகை 7623 சதுரடி என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி நாயக்கர் 7623 சதுரடி கிரயம் துலங்குகிறது என்றால் சரிதான். மேற்படி 7623 சதுரடி ஆனது சதுர மீட்டரில் கணக்கிட்டால் 708.45 சதுர மீட்டராக வருகிறது. நான் வழங்கிய நீ.ம.சா.ஆ. 3 டவுன் சர்வே பீல்டு ரிஜிஸ்டர் எக்ஸ்டிராக்ட்டில் சர்வே எண் 135/1 விஸ்தீரணம் 786 சதுர மீட்டர் கோவிந்தசாமி நாய்க்கர் மகன் ராமகிருஷ்ணன் என்பவர் பெயரில் துலங்குகிறது என்றால் சரிதான். வாதி வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் சொல்லி உள்ள அளவுகளை விட அதிகமான அளவுக்கு பட்டா மற்றும் நீ.ம.சா.ஆ.3 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20. வா.சா.ஆ.1 ஆவணமானது எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்ட சர்வே மற்றும் செட்டில்மென்ட் பதிவுறு சான்றிட்ட நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 135/1க்கு உரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 135/1க்கு எவ்வளவு விஸ்தீரணம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை நீண்ட நேரமாக பார்வையிடுகிறார், அவ்வாறு பார்வையிட்டு வா.சா.ஆ.1 ஆவணம் எவ்வளவு விஸ்தீரணத்திறகு வழங்கப்பட்டது என்று கூற இயலாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

21. வா.சா.ஆ.1 ஆவணமானது சம்போகிரி கோசாய் மகன் கோபாலகிரி கோசாய் என்பவரிரன் பெயரில் துலங்குகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது 624 சதுர மீட்டருக்கு வழங்கப்பட்டது என்றால் மேற்படி ஆவணத்தில் தீர்வை காலத்திற்கு கீழே 6.25 ஆக குறிப்பிட்டிருப்பதாக எனக்கு துலங்குகிறது அதனால் எனக்கு சரிவர கூற இயலாது.

22. வா.சா.ஆ.4 ஆவணமானது எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணமானது சர்வே எண்.135/1க்கான டவுன்

ச/வே பீல்டு ரிஜிஸ்டர் எக்ஸ்டிராக்ட் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் ச/வே எண் 135/1 வாதியின் பெயரில் 786 சதுர மீட்டரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள அளவுகளைவிட வா.சா.ஆ.4லில் சொல்லி உள்ள அளவுகள் அதிகமாக உள்ளது என்றால் சரிதான்.

23. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்ட பட்டா மாறுதலுக்கான உத்தரவு என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் உத்தரவில் ச/வே எண் 140ஆனது ச/வே எண் 140/1 மற்றும் 140/2 ஆக உட்பிரிவாக செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச/வே எண் 140/2 ராஜேஷ் மனைவி நிர்மலா என்பவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் உத்தரவில் ச/வே எண் 135/1எ ஆனது வாதியின் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

24. மேற்படி ச/வே எண்.135/1எ என்பது ச/வே எண் 135/3 என உட்பிரிவு செய்யப்பட்ட ராஜேஷ் மனைவி நிர்மலா என்பவரின் பெயரில் பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் டவுன் பீல்டு ரிஜிஸ்டர் ஆவணமானது ச/வே எண் 140/2 மற்றும் ச/வே எண் 135/3 க்காக வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது ராஜேஷ் மனைவி நிர்மலா பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

25. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.